தலைப்பு 223 - இலங்கை கடற்படை - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 223 - இலங்கை கடற்படையின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆம் ஆண்டு யூன் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கடற்படையின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் இலங்கை கடற்படையின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை இலங்கை கடற்படையின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடற் படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை கடற்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதாக மீண்டுவரும் செலவினங்களை கணக்கு வைக்கையில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) மீண்டுவரும் செலவினம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இலங்கை கடற்படையின் 1202 என்ற செலவினத் தலைப்பின் கீழ் எரிபொருள் விநியோகச் செலவு ரூபா. 9,703,308,156 ஆக காணப்பட்டதுடன், இதில் ரூபா. 373,986,555 தொகை மீளளிப்புச் செய்யப்படாது இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்கான செலவாகும். முன்னரான ஆண்டுகளைப் போலவே, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் வேறு செலவினத் தலைப்பின் செலவினமாக இலங்கை கடற்படையின் 223 என்ற செலவினத் தலைப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	பாதுகாப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 10 ஆம் திகதியிடப்பட்ட MOD/FIN/02/05/03/2024 ஆம் இலக்க கடிதத்தின் அறிவுறுத்தல்களின்படி, இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் மீளப்பெறப்படாத வகையில் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டிற்காக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ரூபா.300,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான கப்பல்கள், படகுகள் மற்றும் நிறுவனங்களால் மாதாந்தம் பெறப்படும் எரிபொருள் செலவுத் தொகையை, ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு முறை செலவுத்	இலங்கை கடற்படைக்கு ஏற்புடையதாக எரிபொருள் செலவினம் மட்டும் 1202 என்ற செலவு விடயத்தின் கீழ் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

		தலைப்புகளுக்கு இடையில் நிதி மாற்றீடு செய்ய நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.	
(ii)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கடப்பாடுகளும் பொறுப்புகளும் நிதி அறிக்கைகளில் குறிப்பு (iii) இன் கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும். இருப்பினும், 2025 ஆம் ஆண்டிற்கான பணம் செலுத்தும் வவுச்சர்களின் மாதிரி ஆய்வில், 2024 ஆம் ஆண்டிற்குரிய ரூபா. 711,192,718 மதிப்புள்ள 157 வவுச்சர்களுக்கான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அவை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளில் கடப்பாடுகளாகக் காண்பிக்கப்படவில்லை	கடற்படையின் முழுமையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையைத் தயாரிக்கும்போது, மேற்படி அவதானிப்பின் படி 157 வவுச்சர்களுக்கு ஏற்புடையதான இரசீதுகள், குறித்த சந்தர்ப்பத்தில் இருந்த இடத்தினை துல்லியமாக அடையாளம் காண முடியாமை காரணமாக அந்த 157 வவுச்சர்களின் தொகை மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்படவில்லை என்று அவதானிக்கப்படுகிறது.	மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக அனைத்து பொறுப்புகளும் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தல . வேண்டும்.
(iii)	கடற்படையின் பணிப்பாளரது (நிதி) 2025 பெப்ரவரி 10 ஆம் தேதியிட்ட என்எச்கிவ்/பிஎப்/டிஎப் / 41/2024 ஆம் இலக்க கடிதம் படி, இலங்கை கடற்படையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா. 659,650,414 என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் பொறுப்பு அறிக்கையில் அந்த தொகை சேர்க்கப்படவில்லை.	எரிபொருள் சேகரிப்பு மற்றும் விநியோகம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்கு இலக்கம் 33 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட கடற்படையின் 33 எரிபொருள் நிரப்பு நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்புடைய இரசீதுகளை தீர்ப்பதற்காகக் கடற்படைத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறப்பட்ட அனைத்து இரசீதுகளும் செலவுக் கணக்கில் சேர்க்கப்பட்டதால், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையில் சேர்ப்பதற்குப் இரசீதுகள் எதுவும் இலருக்கவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெறப்படும் நிலுவைத் தொகை ஒவ்வொரு இரசீது படி தனித்தனி மதிப்பாக அல்லாமல், மொத்த மதிப்பாகப் பொறுப்புகள் அறிக்கையில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக எரிபொருள் செலவினத்திற்கு உரிய அனைத்து பொறுப்புகளும் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தல . வேண்டும்.

(iv)	2023 திசெம்பர் 29 ஆம் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 5/2023 இல், பிரிவு 02 இன் படி, வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளால் ஒதுக்கப்பட்ட எல்லைகளை மீறாத வகையில் செலவுகளை நிர்வகிக்க வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டிற்குரிய, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான மாதிரி ஆய்வின்படி, இலங்கை கடற்படையின் மீண்டு வரும் செலவினங்களுக்காக ரூபா. 2,639,162,863 தொகையையும், மூலதனச் செலவினங்களுக்காக ரூபா. 387,477,247 தொகையையும் நிகர ஒதுக்கீட்டு வரம்புகளை மீறி பொறுப்புகளாகக் கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	கடல்சார் பகுதியில் தொடர்ந்து நிகழும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல், ஆயுதங்கள் மற்றும் சட்டவிரோதப் பொருட்கள் கடத்தல், ஆட்கடத்தல், கடற்கொள்ளை, கடல் மாசுபாடு, ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல் உள்ளிட்ட கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக கடற்படை செயல்படுகிறது. தேவையான ஒதுக்கீடுகள் உள்ளடக்கிய வரவு செலவு மதிப்பீடு 2024 ஆம் ஆண்டுக்காக கோரப்பட்டிருந்தாலும், வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடு மட்டுமே வழங்கப்பட்டது. கடற்படையின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகப் பணிகளைத் தொடர்ச்சியாகவும், ஒழுங்காகவும் பேணுவதற்காகவே மட்டும், செலவின எல்லைகளை மீறி கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டபோது, நிதி ஒழுங்குவிதி 94 (2) மற்றும் 94 (3) இல் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி செயலாற்றப்பட்டுள்ளது.	பொறுப்புகளுக்கு எழுகின்ற போது ஒதுக்கீட்டு எல்லைகளை விஞ்ஞாத வகையில் பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
(v)	SA -21 திறைசேரியால் அச்சிட்டப்பட்ட பிரதியின்படி, ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட முன்பணங்களின் பெறுமதி ரூபா. 4,118,432,741 ஆக இருந்தபோதிலும், ACA 03 படிவத்தில் திறைசேரி முன்பணப் பெறுமதியாக ரூபா. 4,421,682,741 காணப்பட்டது. அதன்படி, ரூபா. 303,250,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்ட வகையில், ரூபா. 303,250,000 ஆன வேறுபாடு, திறைசேரியால் SA-70 படிவத்தில் கணக்கீட்டு தவறுகளை சரிசெய்வதற்காக வைக்கப்பட்ட குறிப்புகளின் மொத்த தொகையும் என்னால் ACA-3 படிவத்தில் உள்ளடக்கியதால் ஏற்பட்ட ஒரு தவாறகும். எதிர் வருங்காலத்தில் கணக்குகளைத் தயாரிக்கும்போது, SA-70 மற்றும் திறைசேரி இருப்புச் சரிபார்ப்பு அறிக்கைகளை ஒப்பிட்டு, இதுபோன்ற தவறுகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி கிடைக்கப பெறுவனவைகள் தொடர்பில் சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.
(vi)	SA -21 ஆம் இலக்க திறைசேரி அச்சிட்ட பிரதியின்படி, செலவினங்கள் மூலமான முன்பண தீர்க்கப்படலின் பெறுமதி ரூபா. 76,065,969,500 ஆக இருந்தபோதிலும், ACA 03 படிவத்தில் செலவினங்கள் மூலமான முன்பண தீர்வையின் பெறுமதி ரூபா. 76,369,219,500 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.	கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்ட வகையில் ரூபா. 303,250,000 ஆன வேறுபாடு திறைசேரியால் திறைசேரி SA-70 படிவத்தில் கணக்கீட்டு தவறுகளை சரிசெய்வதற்காக வைக்கப்பட்ட குறிப்புகளின் மொத்த தொகையும் என்னால் ACA-3 படிவத்தில் உள்ளடக்கியதால் இந்த தவறு ஏற்பட்டுள்ளது. வருங்காலத்தில் கணக்குகளைத் தயாரிக்கும்போது, SA-70 மற்றும்	திறைசேரி தீர்க்கப்படுதல்களை செவ்வையாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குதல் வேண்டும்.

அதன்படி, ரூபா 303,250,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	திறைசேரி இருப்புச் சரிபார்ப்பு அறிக்கைகளை ஒப்பிட்டு, இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண “B“ கணக்கின் திணைக்களக் கட்டுப்பாட்டுக் கணக்கின் கடன் மீதி ரூபா. 601,398,953 ஆக இருந்தபோதிலும், தனிக் கையிருப்பு வகைப்படுத்தல் சுருக்கத்தின்படி கடன் மீதி ரூபா. 579,773,327 ஆக இருந்தது. இதன் மூலம் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு இறுதித் தேதியில் இந்த கடன் மீதிகளுக்கிடையில் ரூபா. 21,625,626 வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாடு குறித்து ஆராய்வதற்காக அமைச்சு நியமித்த குழுவினது அறிக்கையின்படி, இந்த வேறுபாட்டை சரிபார்ப்பதற்கு புத்தகங்கள் மற்றும் கணக்குச் சுருக்கங்கள் கடற்படையிடம் இல்லாமையால், திறைசேரியின் பொது நிதித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதித் தேதியில் கடன் மற்றும் முன்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ள வேறுபாடு அப்படியே காணப்பட்டது.	அவதானிப்புடன் உடன்படுகின்றோம். இந்த ரூபா. 21,625,625.80 ஆன மீதி பதிவழிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச நிதிக் திணைக்களம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	பாதுகாப்பு அமைச்சு மற்றும் அரச நிதி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு திணைக்களக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் தனிக் கையிருப்பு வகைப்படுத்தல் சுருக்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) களஞ்சிய முற்பணக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	தலைப்பு இலக்கம் **223-02** இற்குரிய நினைவுப் பரிசு வருமான அறிக்கையைத் தயாரிக்கும்போது, இந்த அலகிலிருந்து கடற்படையின் வருமானத் தலைப்பில் சேர்க்கப்படும் அரச வருமானம் ரூபா. **650,000,000** தொகை குறைக்கப்படாமல் காட்டியதன் காரணமாக, நினைவுப் பரிசு வருமான அறிக்கையின்படி ஆண்டின் நிகர வருமானம்	ஆண்டின் முடிவில் அரசாங்க வருமானத் தலைப்புக்கு மாற்றப்பட வேண்டிய இலாபம் எவ்வளவு என்பதைக் கணக்கிடுவதற்கு, ஆண்டிறுதி கணக்கைத் தயாரித்து முடிக்க வேண்டும். மாற்றக்கூடிய இலாபமானது கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னரே கணக்கிடப்படுவதாலும், அதுவரை கணக்குகள் தயாரித்து இருந்தமையாலும்,	களஞ்சிய முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக நினைவுப் பரிசு வருமானக் கூற்றில் அரச வருமானத்தை செவ்வையாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ரூபா. **650,000,000** ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. இதனால், ரூபா. **74,166,769** ஆன எதிர்ப் பெறுமதியை கொண்டிருக்க வேண்டிய நிகர வருமானத்திற்குப் பதிலாக, ரூபா. **575,833,231** என்ற நேர்மறைப் பெறுமதியாக நிகர வருமானத்தைக் காட்டப்பட்டிருந்தது.	தவறுதலாக மாற்றப்பட்ட இலாபம் ஐந்தொகை அறிக்கையிலும் நினைவுப் பரிசு வருமான அறிக்கையிலும் சீராக்கப்படவில்லை. எதிர் வருங்காலத்தில் கணக்குகளைத் தயாரிக்கும்போது இந்தக் தவறுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	
(ii)	அரச வருமானமாகச் சேர்க்கப்பட்ட ரூபா. **650,000,000** இற்குரிய குறுக்கு குறிப்பு, முன்கொண்டுவரப்பட்ட இலாப நட்டக் கணக்கு மற்றும் முன்பணக் கணக்குடன் பொருந்தாத காரணத்தால், **2024** திசெம்பர் **31** ஆம் திகதிக்குத் தயாரிக்கப்பட்ட ஐந்தொகை அறிக்கையில் பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்ட ரூபா. **17,939,015** இற்குப் பதிலாக, குறித்த மீதி ரூபா **667,939,015** மேலும், பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா. **457,629,435** ஆக காணப்பட்ட முற்பணக் கணக்கின் மீதி ரூபா. **192,370,565** பெறுமதியான தொகை சொத்துக்களின் மீதியாக சேர்க்கப்பட்டிருந்தது. இந்தக் காரணத்தினால், **2024** ஆம் ஆண்டு திசெம்பர் **31** ஆம் திகதிக்குரிய களஞ்சிய முன்பணக் கணக்குகளின் ஐந்தொகையில் மொத்தச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ரூபா. **192,370,565** ஆல் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஆண்டின் முடிவில் அரசாங்க வருமானத் தலைப்புக்கு மாற்றப்பட வேண்டிய இலாபம் எவ்வளவு என்பதைக் கணக்கிடுவதற்கு, ஆண்டிறுதி கணக்கைத் தயாரித்து முடிக்க வேண்டும். மாற்றக்கூடிய இலாபமானது கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னரே கணக்கிடப்படுவதாலும், அதுவரை கணக்குகள் தயாரித்து இருந்தமையாலும், தவறுதலாக மாற்றப்பட்ட இலாபம் ஐந்தொகை அறிக்கையிலும் நினைவுப் பரிசு வருமான அறிக்கையிலும் சீராக்கப்படவில்லை. எதிர் வருங்காலத்தில் கணக்குகளைத் தயாரிக்கும்போது இந்தக் தவறுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	களஞ்சிய முன்பணப் பரிவர்த்தனைகளுக்கு ஏற்புடையதாக சரியாக இரட்டைப் பதிவுகள் பதியப்படுதல் வேண்டும். அத்துடன் கணக்குகளில் உள்ள பெறுமதிகளின் துல்லியம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	செலவுத் தலைப்பு **223-02** இன்படி, 2024 ஆம் ஆண்டிற்குரிய கடற்படையின் வருமானமாக ரூபா. 650,000,000 ஆன குறுக்கு குறிப்புகள் மூலம் மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும், கடற்படையால் சமர்ப்பிக்கப்பட்ட	எதிர்வருங் காலங்களில் கணக்குகளை தயாரிக்கும் போது இந்த தவறுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	இணங்கியுள்ள வகையில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ACA – **05** படிவத்தில், ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பற்றுக்களில் அதன் பெறுமதிக் குறுக்கு குறிப்புகளின் கீழ் உள்ளடக்கப்படாமையினால், பணத்தால் செய்யப்பட்ட பற்றின் பெறுமதி ரூபா **650,000,000** அதிகமாக காட்டப்பட்டிருந்தது.		
(iv)	விற்பனைகள் மீதான பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பான மாதிரிப் பரிசோதனையின்போது, 2024 ஏப்ரல் 08 ஆம் திகதியிட்ட விற்பனைப் பட்டியலின்படி, அன்றைய திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய VAT பெறுமதி ரூபா. 852,086 ஆக இருந்தபோதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியைக் கணக்கிடும்போது, இந்த திகதிக்குரிய விற்பனைகள் மீதான பெறுமதி சேர் வரி தொகை ரூபா. 803,961 எனக் கருத்திலெடுக்கப்பட்டு, ரூபா. 48,125 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஏப்ரல் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைக்கு அமைவாக, குறித்த பட்டியல்களை பரிசோதனை செய்கையில் பட்டியல் இலக்கம் 733 இல் உள்ள VAT பெறுமதி ரூபா. 72,326 எனச் சரியாகப் பதியப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பெறுமதி அட்டவணையில் உள்ளடக்கப்படும்போது, சரியான VAT பெறுமதிக்குப் பதிலாக தவறுதலாக ரூபா. 24,201 என்று உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்வருங் காலத்தில் இந்த தொகை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் பெறுமதிசேர் வரி செலுத்தல்களை உரிய வகையில் அறிக்கையிடுவதற்கும் சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
		வருங்காலத்தில் இந்தத் தொகையைச் சரிக்கட்ட (நிரவு செய்ய) நடவடிக்கை எடுப்பேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.	
(v)	நிதிநிலை அறிக்கைகளில், திறைசேரி தரவுகளை சமர்ப்பிக்கும்போது 2024 ஆம் ஆண்டுக்காக அதிகபட்ச பற்றுச்சீட்டு வருடாந்த அதிகபட்ச பற்று வரம்பாக களஞ்சிய முற்பணம் (வெடி மருந்துப் பொருட்கள்) ரூபா.**457,629,434** உள்ளடக்கப்பட வேண்டியிருந்தபோதிலும், அது ரூபா.**737,575,826** என்ற வகையில் உள்ளிடப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட வரம்புகளைக் காண்பிக்கும்போது, ஆண்டிறுதி மீதியாக குறித்த ஆண்டின் மொத்தப் பற்று மற்றும் வரவுகளுக்கு இடையேயான வேறுபாடு மட்டும் காட்டப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஆண்டிறுதி மீதியாக மாதாந்தக் கணக்கு சுருக்கத்தின் மீதி உள்ளடக்கப்பட வேண்டுமெனப் பதிவு செய்யப்பட்டது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	களஞ்சிய முற்பணம் (வெடி மருந்துப் பொருட்கள்) கணக்கின் எல்லைகளை சரியாக குறிப்பிடல் வேண்டும்.

(vi)	**17** விற்பனை முகவர்களிடமிருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா.**2,886,505** இற்குள் உள்ளடக்கப்பட்டிருந்த விற்பனையின் மீதான பெறுமதி சேர் வரி (VAT) பெறுமதியை விற்பனைக் கணக்கிலிருந்து பெறுமதி சேர் வரி கணக்கிற்குச் சரிசெய்யாமல் விட்டதன் காரணமாக, **2024** ஆம் ஆண்டில் விற்பனைகள் ரூபா.**440,200** ஆல் அதிகமாகக் காட்டப்பட்டதோடு, அதே பெறுமதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதியும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	விற்பனை செய்யப்பட்ட அமோனியம் நைட்ரேட் இருப்புகளுக்காக நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சம்பந்தப்பட்ட கொள்வனவாளர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, கொள்வனவாளர்கள் மூலம் மீண்டும் அறவிடப்பட்ட தொகை ரூபா.2,886,505 ஆகும். இந்த பெறுமதிக்குள் உள்ளடங்கியிருந்த பெறுமதி சேர் வரியின் (VAT) பெறுமதி ஏறத்தாழ ரூபா.440,200 ஆகும்.	கணக்கீடுகள் சரியாகப் பதியப்படுதல் வேண்டும் என்பதோடு, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) கொடுப்பனவுகள் முறையாகத் தீர்க்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கிடும்போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இலங்கை கடற்படைக்குரிய நிதியல்லாச் சொத்துக்கள் (ACA-06) அட்டவணைக்கு அமைய, 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கடற்படையின் கப்பல்கள், படகுகள் மற்றும் தோணிகளின் பெறுமதியாக ரூபா.29,555,782,322 எனக் காட்டப்பட்ட போதிலும், கணக்காய்விடம் வழங்கப்பட்ட அட்டவணைப்படி அந்தப் பெறுமதி ரூபா.32,958,956,068 ஆக இருந்தமையினால், 2024 திம்பெர் 31 ஆம் திகதியன்று நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கீடு ரூபா.3,403,173,746 இனால் குறைவாக நிதிநிலைமை அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது.	இலங்கை கடற்படைக்கும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் சொந்தமான கப்பல்கள் மற்றும் படகுகளின் விபரங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டதற்கு காரணம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான கப்பல்கள் மற்றும் படகுகளின் செயற்பாடுகள், பராமரிப்புப் பணிகள் மற்றும் எரிபொருள் வழங்கல் அனைத்தும் கடற்படையினால் மேற்கொள்ளப்படுவதனால் ஆகும்.. இனிவரும் காலங்களில், கண்காய்வு அறிக்கைகள் மற்றும் ஏனைய வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்போது, இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மற்றும் படகுகளின் தகவல்கள் மட்டுமே சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஆனாலும் கணக்கில் பதியப்படாத கப்பல்கள் மற்றும் படகுகளின் பெறுமதியை உடனடியாகக் கணக்கில் பதியவும், இதன் மூலம் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் உள்ள சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை நிதிநிலை அறிக்கைகளில் சரியாக உள்ளடக்குதலும் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில், என்னால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதிசார் மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மூலம் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாத இலக்கம் 1701 – நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கான செலவின விடயத்திற்கு மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்குள் ரூபா. 8,838,541 தொகை நிதிப் பிரமாணங்கள் 66 இன் மூலம் மாற்றீடு செய்யப்பட்டிருந்தது.	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் “B“ கணக்கின் கீழ் நீண்ட காலமாக அறவிடப்படாமல் உள்ள மீதிகளை கணக்கு மற்றும் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்காக, 2024 ஆம் ஆண்டிற்குரிய செலவு மதிப்பீடுகளில் ரூபா.200,000 நிதி ஒதுக்கீட்டைக் கோரியிருந்தபோதிலும், ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. ஆண்டின் இறுதியில், அனுமதி அளிக்கப்பட்டு பதிவழிப்பு செய்யப்பட்ட பெறுமதி ரூபா.8,838,541 ஆக இருந்தமையால், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் வாய்மூல ஆலோசனையின்படி, நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஒதுக்கீடுகளை மாற்றீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	சரியான மதிப்பீடுகளை தயாரித்து ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	செலவின விடயம் 2103/18 இன் கீழ், உள்ளக தொலைபேசிப் பரிமாற்ற அலகுகள் மற்றும் சுவிட்ச் வலையமைப்பை இற்றைப்படுத்துவதற்காக **ரூபா.**50,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், அதன் பௌதீக முன்னேற்றம் **53%** ஆக இருந்த நிலையில், ரூபா.**22,772,217** அதாவது **45.5%** ஆன நிதி ஒதுக்கீடு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றீடு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் கடற்படையின் உள்ளக தொலைபேசிப் பரிமாற்ற அலகுகள் மற்றும் சுவிட்ச் வலையமைப்பை இற்றைப்படுத்துவதற்காக ரூபா 50,000,000 நிதி ஒதுக்கீடு, செலவின விடயம் இல. 2103-18 இன் கீழ் ஒதுக்கப்பட்டது. இதில், ரூபா. 23,806,139 நிதி ஒதுக்கீடு அந்த ஆண்டின்போது பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த ஒதுக்கீட்டில் இருந்து ரூபா.20,772,216 நிதி ஒதுக்கீட்டை, கடற்படைக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் கருத்திற் கொண்டு, நிதிப் பிரமாணம் 66 இற்கு அமைய தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் அனுமதியுடன் செலவின விடயம் 2103-014 இற்கு மாற்றீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	மதிப்பீடுகளை மிக சரியாகத் தயாரித்து, நிதி ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும், அத்துடன் ஆண்டின்போது கருத்திட்டங்களை நிறைவேற்று-வதற்கான எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைதல் வேண்டும்.

(இ)	மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் கடற்படை இறங்குதுறையைக் கட்டும் திட்டத்திற்காக ரூபா.1,657,000,000 ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், 6 சந்தர்ப்பங்களில் ரூபா.764,865,000 அதாவது 46% ஆன நிதி ஒதுக்கீடு வேறு செலவின விடயங்களுக்கு மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய திட்டம் மார்ச் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், கிட்டத்தட்ட 10 வருடங்கள் கடந்தும் திட்டம் நிறைவடையாதபோது, திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றீடு செய்யப்பட்டிருந்தன.	2024 யூலை 31 ஆம் திகதியன்று ரூபா.486.13 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலதிகமாக, ரூபா. 740 மில்லியன் அளவில் எதிர்காலத்தில் செலவாகும் என்று பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் (CECB) அறிவிக்கப்பட்டிருந்தது. ரூபா. 430.87 மில்லியன் மீதமிருப்பது அவதானிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கப்பலின் செலவுகளைச் செய்வதற்கு ரூபா. 305 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுத் தேவையும், இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்பாகப் பெறப்படவுள்ள 4000 தொன் கொள்ளளவு கொண்ட மிதக்கும் தளத்தை நிறுவும் செலவுகளுக்காக ரூபா 76 மில்லியன் தேவையும் காணப்பட்டது. அதற்காக, ரூபா 381 மில்லியன் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் செலவின விடயம் 2101-023 மற்றும் 2506-024 இற்கு மாற்றீடு செய்யப்பட்டது. தேவையான செலவின முகாமைத்துவத்தைச் செய்து கொள்வதற்காக, குறைபாடு நிலவிய 2002, 2003, 2102 மற்றும் 2401 ஆகிய செலவின விடயங்களுக்கும் மாற்றீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	மதிப்பீடுகள் தயாரிக்கும்போது அவை மிகவும் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு, எந்தவொரு செலவினத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியையும் அந்த ஆண்டிற்குள் சரியான முகாமைத்துவத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்				**பரிந்துரை**
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமை**		
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை**				
(i)	நிதி ஒழுங்குவிதி 71 பிரிவு	-	பதவிகளை உருவாக்குதல், பதவிகளைத் தரப்படுத்துதல், அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையை அதிகரித்தல், பதவிகளின் பெயரை மாற்றுதல், புதிய பின்பற்றுதல்கள் அல்லது சம்பள அளவுகோல்கள், ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சம்பளங்கள் அத்துடன் ஊதியங்களை உருவாக்குதல் போன்ற விடயங்களுக்காக திறைசேரியின் பிரதிச் செயலாளரின் முன் அனுமதி அதிகாரம் தேவைப்படும். மேலும், அதற்காக அவர் பொது நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் இணக்கத்தைப் பெற வேண்டியிருந்தபோதிலும், கடற்படையின் செயற்பாடுகளுக்காக 2,224 சிவில் பதவியணி அனுமதிப்பதற்கான கடிதங்கள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	கடற்படைக்கான சிவில் பதவியணி நியமனத்தை அங்கீகரிப்பதற்காக பொது நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சு செயலாளரின் இணக்கத்தைப் பெற்றிருந்தபோதிலும், அந்தக் ஆவணங்கள் தற்போது காணாமல் போயுள்ளதால் சமர்ப்பிக்க முடியவில்லை.	குறித்த ஆவணங்கள் காணமல் போதல் தொடர்பில் பரிசோதனைகள் மேற்கொண்டு உரிய அனுமதிகளுடன் கூடிய கடிதங்களை கணக்காயவிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ii)	நிதி ஒழுங்குவிதி 507 பிரிவு	-	கலஞ்சிய முற்பணக் கணக்குடன் தொடர்புடைய செயற்பாட்டிற்குரிய நிலையான சொத்துக்களின் இருப்பும் குறித்த சொத்துக்களின் நிலைமை பற்றிய கூற்றொன்றும் தயாரிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்குகளுடன் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், அவ்வாறான கூற்று எதுவும் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.	இனிவரும் காலங்களில், நிதிப் பிரமாணம் 507 இற்கமைய நிலையான சொத்துக்கள் தொடர்பாகச் செயற்படுவதற்கு, சம்பந்தப்பட்ட விடயப் பொறுப்புள்ள உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.	நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் 2024 நவம்பர் 06 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கைகள் இலக்கம் 04/2024	-	கடற்படையினால், கடற்படை மாலிமா சேவை உபசரிப்பு சேவை, கடற்படை எரிபொருள் நிரப்பு நிலையம், திமிங்கிலம் பார்க்கும் திட்டம் மற்றும் கடற்படை விவசாயத் திட்டம் என 4 நிதியங்கள் பராமரிப்பதுடன், இந்த 4 நிதியங்களுக்கும் ஏற்புடையதாக 41 வங்கிக் கணக்குகள் பேணப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் அனைத்தும் சட்டரீதியற்ற நிதியங்களாகப் பேணப்பட்டாலும், சுற்றறிக்கையின்படி அந்த நிதியங்களை இல்லாது செய்து, அவற்றின் மீதிப் பணத்தை திரட்டிய நிதியத்திற்கு வரவு வைப்பதற்கோ நிதியங்களைத் தொடர்ந்து பேணுவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின், அந்த நிதியங்களை பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கவோ 2025 மே மாதம் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிதியங்கள் தொடர்பாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக 2025 சனவரி 31 ஆம் திகதி அரச நிதித் திணைக்களத்தில் ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. 2025 பெப்ரவரி 10 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதித் திணைக்களத்தின் கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்றின் ஊடாக, சட்டரீதியற்ற நிதியங்களை சட்டரீதியான நிதியங்களாக மாற்றுவதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நிதி அமைச்சுக்கு	2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வெளியிடப்பட்டுள்ள அரச நிதிச் சுற்றறிக்கை 04/2024 உடன் இணங்கி, சட்டரீதியான நிதியங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

				சமர்ப்பிக்கப்படவுள்ள வரைவுக்கு ஒரு யோசனைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.	
(இ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 04 பந்தி, வழிகாட்டல் இலக்கம் 13 பிரகாரம மற்றும் அரச கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 4.2.2. (அ) மற்றும் (ஆ) பிரிவுகள்	-	கொள்முதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது நிறைவடையும்வரை, ஒவ்வொரு கொள்முதல் செயற்பாட்டின் படிநிலைகளையும் காலவரிசைப்படி விவரிக்கும் ஒரு ஆவணம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும், அவ்வாறு செய்யப்படவில்லை.	கொள்முதல் செயற்பாடுகளின் படிநிலைகள் ஒரு கால அட்டவணையாகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், கொள்வனவு நடவடிக்கைகள் தனித்தனியாகக் காட்டப்படவில்லை. 2025 கொள்முதல் திட்டத்தில் இந்தக் கொள்முதல் செயன்முறையின் படிநிலைகள் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	சுற்றறிக்கை பிரகாரம் கொள்முதல் செயற்பாட்டின் படிநிலைகளை ஒரு கால அட்டவணையாக விபரிக்கும் ஆவணம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	2022 ஆம் ஆண்டு திசெம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க நடைமுறை விதிகள் தொடர்பிலான அதிவிசேட வர்த்தமானியில் 100 ஆவது பந்தி பிரகாரம்	-	ஒரு அரசாங்க உத்தியோகத்தர் சேவைக்கு அறிக்கையிட்ட பின்னர், அந்த உத்தியோகத்தருக்கு கடமைப் பட்டியலை எழுத்துமூலம் கையளிப்பதற்கு, பிரிவுகள் அல்லது கிளைகளின் தலைவர் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஆயினும், கடற்படையின் சிவில் பதவியணியைச் சேர்ந்த ஆரம்ப சேவை வகுதிப் பணியாளர்களுக்குக் கடமைப் பட்டியல்கள் வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	ஆரம்ப சேவை வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் கடற்படையின் பல பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்கள் மூலமாகவே ஆரம்ப சேவை வகுதியைச் சேர்ந்த ஊழியர்களுக்கான கடமைகள் ஒப்படைக்கப்படுகின்றன.	நடைமுறை விதிகளின் படி ஆரம்ப சேவை தொகுதிக்குரிய உத்தியோகத்தர்களின் பொருட்டு கடமைப் பட்டியல் வழங்கப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	பரிந்துரை
2020 ஆகஸ்ட் **28** ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் **02/2020** கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் **03** ஆம் பந்தியும், வழிகாட்டல் இலக்கம் **12** இற்கு அமையவும், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தில் அந்த நிறுவனத்திற்குரிய குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளின்படி தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், செயற்பாட்டுக்கான கால அட்டவணை, எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் விளைவுகள், அத்துடன் அதற்குப் பொறுப்பான தரப்பினரும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். ஆயினும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில், ஒவ்வொரு பிரிவிற்கும் ஒப்படைக்கப்பட்ட எல்லா பொறுப்புத் துறைகள் மற்றும் அதற்குக் கீழான செயற்பாடுகள் குறிப்பாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்திலுள்ள முரண்பாடுகளை திருத்தி, கடற்படைக்குரிய குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளின்படி தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், செயற்பாட்டுக்கான கால அட்டவணை, எதிர்பார்க்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் விளைவுகள் அத்துடன் அதற்குப் பொறுப்பான தரப்பினரையும் உள்ளடக்கிக் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டம் பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின்படி முன்னுரிமைகளுக்கு அமையத் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள், செயற்பாட்டுக்கான கால அட்டவணை, எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் விளைவுகள், அத்துடன் அதற்குப் பொறுப்பான தரப்பினரையும் உள்ளடக்கி வருடாந்தத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
இலங்கை கடற்படைக்குச் சொந்தமான, கிழக்கு கடற்படைக் கட்டளையின் கீழ் இயங்கும் இலங்கை கடற்படைத் தளம் மற்றும் விசேட கப்பல் படையணித் தலைமையகம் ஆகிய இரண்டு கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் **2024** திசெம்பர் **31** ஆம் திகதியில் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு முடிவில், இந்த இரண்டு கட்டிடங்களின் கட்டுமானத்திற்காக முறையே ரூபா.**388,608,541** மற்றும் ரூபா.**14,590,616** செலவு செய்யப்பட்டிருந்தது.	இலங்கை கடற்படைத் தளத்தின் பத்து மாடி உத்தியோகத்தர் கட்டிடத்தின் முதலாம் கட்டத்தின் கீழ், தற்போது ஏழாவது மாடி வரையான கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இருப்பினும், **2025** ஆம் ஆண்டிற்காக கடற்படைக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது முன்னுரிமைகளின் அடிப்படையில் வேறு கட்டுமானப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டதன் காரணமாக, இந்த கட்டுமானம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.	திட்டமிட்ட வகையில் கட்டுமானங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.3 சொத்துக்களின் முகாமைத்துவம்
பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான, ஏறத்தாழ **0.7051** ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட, இலங்கை கடற்படை கப்பல் தம்பபண்ணீ நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் பழைய புத்தளம் கடற்படை அவதானிப்பு காவற்நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் பழைய புத்தளம் கடற்படை கிளைப் பிரிவுக்கு அருகிலுள்ள புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான இலக்கம் **196** உடைய அதிகாரபூர்வ உத்தியோகத்தர் இல்லத்தை கடற்படையிடம் கையளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்கான இணக்கத்தை வழங்க முடியாது என **2022** ஒக்டோபர் **05** ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தும், அந்த இடத்தில் கடற்படை அவதானிப்பு காவற்நிலையம் தொடர்ந்து பேணப்பட்டு வந்தது.	பழைய புத்தளம் கடற்படை அவதானிப்பு காவற் நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் பழைய புத்தளம் கடற்படைக் கிளைப் பிரிவுக்கு அருகிலுள்ள இலக்கம் **196** உடைய உத்தியோகத்தர் இல்லத்தை கடற்படைக்குக் கையளிக்க இணங்க முடியாது என **2022** ஒக்டோபர் **05** ஆம் திகதியிடப்பட்ட புகையிரத பொது முகாமையாளரின் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த விடயம், **2022** நவம்பர் **08** ஆம் திகதியிடப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கடிதம் மூலம் கடற்படைத் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	இந்த கடற்படை அவதானிப்பு நிலையத்தைத் தொடர்ந்து பேணுவது தேசிய பாதுகாப்புக்கு அத்தியாவசியமானது எனில், சம்பந்தப்பட்ட அதிகாரமுள்ள நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, அந்த காணியை கடற்படை சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்திற்குச் சொந்தமான, ஏறத்தாழ **0.1011** ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட, இலங்கை கடற்படை கப்பல் புவனெக நிறுவனத்தின் கீழ் உள்ள வலேப்பாடு தெற்கு **02** இல் அமைந்துள்ள காணி ஒன்றைப் பேணிச் செல்வதற்காக, **2020** ஆகஸ்ட் **14** ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் PA/**12**/MS/**19/252** உடைய கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ பொது முகாமையாளரின் கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்பட்ட போதிலும், கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெற்று வந்தன.	காணிப் பகுதியை கையளிப்பதற்கான அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் பூநகரி பிரதேச செயலாளரால் மாகாண காணி ஆணையாளரின் பரிந்துரைகளுடன் காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, கையளிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கோரி **2024** ஏப்ரல் **16** ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.	கையளிப்பதனை பரிந்துரைக்கப்பட்டுள்ள காணியினை கையகப்படுத்தும் பணிகளை துரிதமாக முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.
(இ)	**2024** திசெம்பர் **31** ஆம் திகதியில், கடற்படை தனது பயன்பாட்டுக்காக தற்காலிக இணக்கங்களைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஏனைய திணைக்களங்களுக்குச் சொந்தமான	மயிலடியில் அமைந்துள்ள காணிப் பகுதியை கடற்படைக்குக் கையளிப்பது தொடர்பான தற்போதைய முன்னேற்றம் குறித்து, **2025** சனவரி **17** ஆம் திகதியிட்ட	பயன்கொள்வதற்காக துரிதமாக இணக்கப்பாட்டினை பெற்றுக்கொண்டு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை

	காணியின் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ **404.2386** ஹெக்டேர் ஆகும். இவற்றில், ஏறத்தாழ **0.1517** ஹெக்டேர் மயிலடியில் அமைந்துள்ள காணி, ஏறத்தாழ **0.1517** ஹெக்டேர் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள காணி, மற்றும் ஏறத்தாழ **0.8093** ஹெக்டேர் ஒலுவில் துறைமுகத்தில் அமைந்துள்ள காணி ஆகியவற்றுக்கு மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டு முடிவிலும் பயன்கொள்ளுதலுக்காக தற்காலிக இணக்கம் கிடைக்கப்பெறவில்லை.	கடிதத்திற்கு அமைய, இந்த **3** காணித் துண்டுகளையும் கடற்படை கையகப்படுத்துவது சம்பந்தமாக உரிய நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், பின்தொடர்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.	எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	மொத்தமாக **6.574** ஹெக்டேர் பரப்பளவு கொண்ட **5** காணித் துண்டுகளை கடற்படைக்குக் கையளிக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கோரி **2024** யூலை மற்றும் திசெம்பர் மாதங்களில் காணி ஆணையாளரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும், அதற்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை. அத்துடன், பின்தொடர்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.	இந்த **5** காணித் துண்டுகள் சம்பந்தமாக காணி ஆணையாளர் நாயகம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், பின்தொடர்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.	உரிய பின்னாய்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு இந்தக் காணியை துரிதமாக கையகப்படுத்து-வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	கடற்படையினால் பயன்படுத்தப்படும், மொத்தமாக ஏறத்தாழ 7.1094 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 10 காணித் துண்டுகளை கடற்படையின் கடற்படையின் பயன்கொள்ளுதலுக்காக வழங்குமாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட தேதிவரை அதற்கான இணக்கம் கிடைக்கப்பெறவில்லை.	துறைமுகம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, கையளிக்கும் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்று அறிவிக்கப்பட்டிருந்ததால், 2024 மார்ச் மாதம் 19 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் கலந்துரையாடல் ஒன்றுக்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.	இந்த 10 துண்டுகளிலும் பயன்பாட்டுக்காக இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(உ)	கடற்படைக்குச் சொந்தமான பொருட்கள், உபகரணங்கள், மரச்சாமான்கள், இயந்திரங்கள், கணினி பாகங்கள், உருக்கு கபட்கள் மற்றும் அலுமாரிகள் போன்ற நிலையான சொத்துக்களில், கொள்முதல் விலை ரூபா.7,688,721 ஆக இருந்த பொருட்கள், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி பழுதுபார்க்க முடியாத நிலையில் இருந்தபோதிலும், அந்தப் பொருட்களை தீர்ப்பதற்கு சரியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.	பழுதுபார்க்க முடியாத பயன்பாட்டுக்கு உதவாத, நிலையில் காணப்படும் விடயங்கள் தொடர்பில் கடற்படை செயற்பாடுகளின் பிரகாரம் பொருத்தமான பணிகளை மேற்கொள்வதற்கு (பொது 47) படிவம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	உத்தேச வகையில் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொண்டு இந்த பயன்பாட்டுக்கு உதவாத சொத்துக்களை தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஊ)	இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 3 கப்பல்கள் / படகுகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தமையால், அவற்றை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்படினும் குறித்த நடவடிக்கைகள் முடிவடையவில்லை.	பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காணப்படும் GG 403 படகைத் அகற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. P 156 மற்றும் P 173 ஆகிய 2 படகுகளும் வடமேல் கடற்படைக் கட்டளையில் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு, அவற்றின் செயல்திறன் குறைந்ததன் காரணமாக, அவற்றைச் செயற்பாடுகளிலிருந்து முறையாக நீக்க ஒரு ஆய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.	CG 403 படகை அகற்றுவதற்கு ஏற்புடையதாக நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதுடன், P 156 மற்றும் P 173 படகுகளை உரிய அனுமதிகளை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.4 முகாமைத்துவ குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	பரிந்துரை
(அ)	கிழக்கு கடற்படைக் கட்டளையின் கீழ் இயங்கும், முல்லைத்தீவில் உள்ள நந்திக்கடால் கடலேரிக்கு அருகாமையில் அமைந்துள்ள இ.க.ப.கப்பல் கோடாபய முகாமைக்குச் சொந்தமான **1350** சதுர அடிகளைக் கொண்ட A**2**, A**3**, A**5**, B**2**, B**3**, B**5**, C**2**, C**3**, C**4** ஆகிய காவலரண்கள் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக கடமைக்கு போதுமான கடற்படையினர் இல்லாமையால், முகாமின் காவல் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்படாமல் இருந்து வந்தன.	இந்த முகாமிற்குச் சொந்தமான காணி 671 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. முகாம் முழுவதும் 17 காவலரண்கள் அமைந்துள்ளன, ஆனால் கடற்படையினரின் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக, தற்போது பகல்-இரவு என 6 காவலரண்களும் இரவில் ஒரு காவலரணும் மட்டுமே இயக்கத்தில் உள்ளன.	முகாமின் பாதுகாப்பு மற்றும் கடற்படை அவதானிப்பு பணிகளுக்காக போதியளவு காவலரண்கள் எண்ணிக்கையை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	கிழக்கு கடற்படை கட்டளையின் கீழ் உள்ள இலங்கை கடற்படைக் கப்பல் வலகம்பா நிறுவனத்திற்கு சொந்தமான கனிஷ்ட கடற்படையினரின் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்பட்ட கள்ளறாவ என்ற இடத்தில் அமைந்துள்ள ஏறத்தாழ **900** சதுர அடி பரப்பளவிலான முன் பொருத்தப்பட்ட கடற்படை துணைப் பிரிவு கட்டிடம், குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது.	ஆளணிப் பற்றாக்குறை காரணமாக இதன் பயன்பாடு குறைந்த மட்டத்தில் உள்ளதுடன், இந்த முன் பொருத்தப்பட்ட கட்டிடம் இலங்கை கடற்படையின் வலகம்பா நிறுவனத்தில் பொருத்துவதற்கு ரூபா 842,338 ஆரம்பச் செலவைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	சரியான அனுமதிகளின் பேரில், குறித்த கட்டிடத்தை விரைவாகவும், பயனுள்ள வகையிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	தெற்கு கடற்படை கட்டளையின் கீழ் உள்ள இலங்கை கடற்படையின் ருஹுண நிலையத்திற்கு சொந்தமான அலுவலகங்கள் மற்றும் களஞ்சிய அறைகளாகப் பயன்படுத்தப்பட்ட, தங்கல்லையில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டிடத்தின் ஆதாரத் தூண்கள்	இரண்டு மாடி கட்டிடத்தின் 3,605 சதுர அடி இடம் (மேல் மாடி) குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், 2,987 சதுர அடி கொண்ட கீழ் மாடியானது அலுவலகங்கள் மற்றும் களஞ்சிய அறைகளுக்காகச் செப்பனிடப்பட்டு,	கட்டிடத்தைப் பழுதுபார்த்து, அதனைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல்

	சிதைவடைந்த நிலையில் இருந்தன. இதனால், ஏறத்தாழ 3,605 சதுர அடி கொண்ட மேல் மாடி குறைவாகவே பயன்படுத்தப்பட்டு வந்ததோடு, கட்டிடத்தைப் பயன்படுத்துவது ஆபத்தான நிலைமையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.	பயன்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு மாடி கட்டிடத்தின் மேல் மாடி எந்தவொரு பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுவதில்லை என அறியப்படுகிறது.	வேண்டும்.
(ஈ)	கிழக்கு, மேற்கு, வடக்கு, வடமத்திய, தெற்கு, வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற்படை கட்டளைகளுக்குச் சொந்தமான முறையே 15, 13, 83, 06, 06, மற்றும் 08 என மொத்தம் 135 கட்டிடங்கள், அவற்றின் மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நிதிக்4ற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் சேர்க்கப்படவில்லை. இதில், **107** கட்டிடங்களுக்குரிய மதிப்பீட்டு பெறுமதியை **2015**ஆம் ஆண்டிலும், ஒரு கட்டிடத்திற்கான மதிப்பீட்டு பெறுமதியை **2021**ஆம் ஆண்டிலும் பெறுவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும், அதற்கான பதில் இதுவரை கிடைக்காதது குறித்து எவ்வித பின்தொடர்தலும் செய்யப்படவில்லை.மேலும், **27** கட்டிடங்களுக்கான மதிப்பீட்டு பெறுமதியை பெறுவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடம் இதுவரை கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	உரிய கட்டிடங்களை சரியான வகையில் மதிப்பிடப்பட்டு நிதிநிலை கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	கிழக்கு கடற்படை கட்டளையின் வழங்கல் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு உரிய உதிரிப் பாகங்கள் விநியோகத்தின்போது, SPDC II E, SPDC II L, SPDC III, SPDC IV, DOVARA CES, Lubrion Stores ஆகிய களஞ்சியங்களில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று இருப்புகளின் சரிபார்ப்பில் மொத்தம் ரூபா. **109,307,836/-** பெறுமதியான பொருட்கள் இறுதிப் பயனாளியால் எடுத்துச் செல்லப்படாமல் நீண்ட காலமாக களஞ்சியத்திலேயே கிடந்தமை கண்டறியப்பட்டது. களஞ்சியத்தில் விநியோகிக்கப்படாமல் இருந்த பொருட்களின் கால வரம்பு, **3** வருடங்களுக்கு மேல் இருந்த பொருட்கள் **100** உருப்படிகளும், **2** முதல் **3** வருடங்களுக்கு இடையில் இருந்த பொருட்கள் **35**	பொருளாதார நெருக்கடி காரணமாக ரோந்துப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டதால், கப்பல்கள் மற்றும் படகுகளின் திருத்த வேலைகள் குறைந்தன. இதன் காரணமாக, SPDC II L, SPDC III, DOVARA, CES ஆகிய களஞ்சியங்களில் உள்ள இருப்பில் உள்ள உதிரிப்பாகங்களுக்கான விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டது. வருடாந்த கையிருப்புத் தேவைகளைச் சரியாக அடையாளம் கண்டு பொருட்களைப் பதிவு செய்யுமாறு அனைத்துக் கடற்படைக் கட்டளைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, பொருட்கள் நீண்ட காலத்திற்கு களஞ்சியங்களில் தேங்கிக் கிடப்பது எதிர்காலத்தில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.	தற்போதைய கையிருப்புகள் மற்றும் தேவைகள் என்பன சரியாக அடையாளம் காணப்பட்டு, பொருட்களுக்கான கட்டளைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பான தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

	உருப்படிகளும், **1** முதல் **2** வருடங்களுக்கு இடையில் இருந்த பொருட்கள் **250** உருப்படிகளும் என்ற வகையிலாகும். இதன்படி, வருடாந்தப் இருப்புகளின் தேவையைச் சரியாக அடையாளம் காணாமல் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சிய முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் என்பன அவதானிக்கப்பட்டன.		
(ஊ)	**2023** நவம்பர் **19** அன்று கொள்வனவு செய்யப்பட்ட, மொத்தம் ரூபா. **8,513,956/-** பெறுமதியான **258** இரும்புக் கூரைகள், **2025** மார்ச் **04** அன்றுள்ளவாறு இரும்புக் களஞ்சியத்திலேயே சேமிக்கப்பட்டிருந்தன. இந்த இருப்புகள், கடற்படை மற்றும் கடல்சார் அறிவியல் பீடத்தைச் சேர்ந்த அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப் பாடசாலையில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனர்த்த மேம்பாட்டு சிமுலேட்டர் திட்டத்திற்காக கட்டளையிடப்பட்டிருந்தன. இதன்படி, தேவைப்பாடு சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படாமல் பொருட்கள் கட்டளையிடுவதன் மூலம் அரச நிதியானது போதுமான அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.	ENA/APOE/RCFO/ENG/2023/2143 இலக்க கடித கோவைகளுக்கு ஏற்புடையதான விடயங்களை கிழக்கு கடற்படை கட்டளையின் தேவைகள் பொருட்டு பய்னபடுத்துவதற்காக திணைக்களத்து பெறுகை குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.	தேவைகளை உரிய வகையில் அடையாளம் காணப்பட்டு கட்டளைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் , இந்த இருப்புகளை பயனுள்ள வகையில் பயன்படுத்தல் வேண்டும்.
(எ)	கடற்படைப் பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள இரத்தச் சுத்திகரிப்பு பிரிவில் உள்ள **3** டயாலிசிஸ் இயந்திரங்களின் உத்தரவாதக் காலம் **2023** யூலை **01** ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. **2024** மார்ச் **01** ஆம் திகதி முதல் **2025** மார்ச் **31** ஆம் திகதி வரை சேவை ஒப்பந்தம் செய்வதற்காக, **2023** திசெம்பர் **20** ஆம் திகதி தனித்தனியான பழுதுபார்ப்புப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், **2025** பெப்ரவரி மாதம் வரையிலும் அந்தச் சேவை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை.	சேவை ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக, 2023 திசெம்பர் 21ஆம் திகதி முதல் 2025 பெப்ரவரி 05ஆம் திகதி வரை 22 தடவைகள் இந்த ஆவணக் கோப்பு வெவ்வேறு இடங்களுக்குப் பரிமாறப்பட்டுள்ளது. கணக்காய்வின் பரிந்துரைக்கமைய, எதிர்காலத்தில் சேவை ஒப்பந்தங்களைச் செய்வதற்கு ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக உள்ளக கட்டுப்பாட்டுச் செயல்முறை வலுப்படுத்தப்படும்.	சேவை உடன்படிக்கை துரிதமாக புதுபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பொருத்தமான முறைமை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஏ)	மெதகொட பங்களாவின் புனரமைப்புப் பணிகளுக்காக ரூபா. **6,326,857/-** செலவிடப்பட்ட போதிலும், தற்போது புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. இந்தப் புனரமைப்புப் பணிகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. **1,769,913/-** பெறுமதியான பொருட்கள், இலங்கை கடற்படைக் கப்பல் ஷில்ப நிறுவனத்தின் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தன. அத்துடன், இந்தப் புனரமைப்புக்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகையான ரூபா. **6,326,857/-** இல், ரூபா. **1,274,890/-** செலவில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை மூலம் குழாய்க் கிணறு ஒன்று நிறுவப்பட்டிருந்தாலும், அதன் மூலம் நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போயுள்ளது.	புனரமைப்புப் பணிகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டு, தற்காலிகமாக வேலைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக, இலங்கை கடற்படையின் ஷில்ப நிலையத்தின் கையிருப்புகளை ஏனைய அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் பராமரிப்புப் பணிகள் மற்றும் திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.	கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஐ)	**2024** திசெம்பர் **31** ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முற்பணக் கணக்கு “பி“ இன் தனிப்பட்ட இருப்பு வகைப்படுத்தல் சுருக்கத்தின்படி, கடற்படையின் 47 நபர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் வயது பகுப்பாய்வின் அடிப்படையில், **5** வருடங்களுக்கும் மேலாக மொத்தம் ரூபா. **6,832,530/-** அறவிடப்படாமல் நிலுவையில் இருந்தது.	அவதானிப்புடன் உடன்படுகின்றோம். 5 வருடங்களுக்கும் மேலான ரூபா 6,832,530 கடன் நிலுவையை மீளப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிலுவை கடன் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஒ)	தனிப்பட்ட நிலுவை வகைப்படுத்தல் சாராம்சம் பிரகாரம், பணியை விட்டுச் சென்ற **41** ஊழியர்களிடம் இருந்து **1** முதல் **5** வருட காலத்திற்குள் ரூபா. **5,613,358/-** தொகையும், **5** ஊழியர்களிடம் இருந்து **5** வருடங்களுக்கும் மேலாக ரூபா. **399,255/-** தொகையும், என மொத்தம் **46** ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் நிலுவைத் தொகையான ரூபா **6,012,613/-**, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு முடிவடையும் வரையிலும் அறவிடப்படாமல் இருந்தது.	05 ஊழியர்களிடமிருந்து 05 வருடங்களுக்கு அதிகமான காலம் தொடக்கம் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா.**399,255** உடன் இணங்கப்படுகிறது.	கடன் உடன்படிக்கை பிரகாரம் நிலுவை மீதி அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஓ)	ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்காக மீளப்பெறும் அடிப்படையில் வழங்கப்பட்ட எரிபொருட்களில், ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்காக **2025** மே மாதம் வரையிலும் ரூபா. **1,186,954/-** மீளப்பெறப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டது.	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் பொருட்டு ரூபா.1,186,954.61 மேலும் அறவிடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக உரிய நிறுவனத்தை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நிலுவை தொகை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(ஔ)	ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் திட்டங்களுக்காக இலங்கை கடற்படையின் அலுவலர்கள் மற்றும் கடற்படை வீரர்கள் ஈடுபடுத்துவது தொடர்பான தகவல்களின் அடிப்படையில், ஆய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கு ஏற்புடையதாக கடற் படையால் குறித்த கடற்படை அலுவலர்கள் மற்றும் கடலோடிகள் பொருட்டு ரூபா. **369,951,372/-** அளவிலான ஊதியச் செலவு கடற்படையால் மீளப்பெறப்படாமல் செலவிடப்பட்டிருந்தது.	இதற்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தொழில்படை பங்களிப்பு வழங்கப்படுவதால் சம்பளம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படவில்லை**.**	உரிய நிதி மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கடற்படைக்கு ஏற்புடையதாக சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களில் **55,000** பதவியணி அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், **2024** திசெம்பர் **31** ஆம் திகதியன்று உண்மையான பதவியணி எண்ணிக்கை **42,454** ஆக இருந்ததால், சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தில் மொத்தம் **12,546** வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன. இது, ஒட்டுமொத்த அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையில் ஏறத்தாழ **22%** ஆகும். அதனுள் வெற்றிடமாகிய சிரேஷ்ட கடற்படை அலுவலர்களின் எண்ணிக்கை **655** வெற்றிடங்கள் இருந்தன. இந்த எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் சுமார் **17%** ஆகும். வெற்றிடமாகிய	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 55,000 ஆயினும், பதவியணி எண்ணிக்கை 53,000 விஞ்ஞாத வகையில் பராமரிக்குமாறு 2019 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிய எம்ஓடீ/ டீஈஎப்/ எச்ஆர்எம்/ எஸ்எல்என்/ பீஈஎன்/ 05 ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால தீர்வாக 2024 ஆண்டுக்காக 169 அலுவலர்கள் மற்றும் கடலோடிகள் 4,000 ம் ஆட்சேர்ப்பு செய்வதற்கு கோரப்படினும், பாதுகாப்பு அமைச்சினால் 169 அலுவலர்கள் மற்றும் கடலோடிகள் 2,000 ம் அளவிலானோர் ஆட்சேரப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 2025 ஆண்டுக்காக 200 அலுவலர்களும்	வெற்றிடங்கள் அல்லது பதவியணி தேவைகளை உரிய வகையில் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தம் செய்து உரிய அனுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	மூன்றாம் நிலை மட்டத்தின் கடற்படை நபர்களின் எண்ணிக்கை 11,891 ஆகும் என்பதுடன், இது எண்ணிக்கையில் ஏறத்தாழ **23%** ஆகும். குறித்த வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையை திருத்தவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	கடலோடிகள் 4,000 ம் பேர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அகுமதி பொருட்டு பாதுகாப்பு அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	கடற்படைக்கு ஏற்புடையதாக சிரேஷ்ட, மூன்றாம் நிலை , இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடற்படை சிவில் பதவியணி எண்ணிக்கை மொத்தம் **1,936** ஆகும். எனினும், **2024** திசெம்பர் **31** ஆம் திகதி நிலவரப்படி, மொத்தமாகப் பணியில் இருந்த பதவியணி எண்ணிக்கை **1,200** மட்டுமே ஆகும். இதனால், **736** வெற்றிடங்கள் அல்லது **38%** பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை மட்டங்களுக்கான சிவில் பதவியணி வெற்றிடங்களின் வீதங்கள் முறையே **30%**, **92%**, **50%** மற்றும் **37%** ஆக இருந்தன. இந்த நிலைமை கடற்படை உயர் செயல்திறனை அடைவதற்கு ஒரு தடையாக இருந்துள்ளது.	இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தின் பதவிகளிலில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டு அரசாங்க நிருவாக அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன்படி அனைத்து நிறுவனங்களிலும் ஆரம்ப சேவை தொகுதியில் தற்போது காணப்படும் அனைத்து வெற்றிடங்களுக்கும் ஆட்சேரப்புச் செய்வதை மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதால், கடற்படை சிவில் பதவியணியின் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடங்களுக்காக பதவியணி ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முடியவில்லை.	தேவைகளை உரிய வகையில் நியாயப்படுத்தி அனுமதி பெற்றுக்கொண்டு உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சிவில் பதவியணி திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ)	**2024** திசெம்பர் **31** ஆம் திகதி நிலவரப்படி நிரந்தரமாக்கப்படாத சிவில் பதவியணி ஊழியர்களின் எண்ணிக்கை **10** ஆக இருந்தது. இவர்கள் **2018** மற்றும் **2019** ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். **2024** திசெம்பர் **31** ஆம் திகதி வரையில், இந்த ஊழியர்கள் **5** வருடங்களுக்கும் மேலாக சேவைக் காலத்தை தொடர்ச்சியுறாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. சிவில் பதவியணியில் **736** பணியிடங்கள் வெற்றிடங்களாக இருந்த போதிலும், இந்த ஊழியர்களை **5** வருடங்களாக சேவைக் காலத்தை தொடர்சியுறாது பணியில் வைத்திருந்தல் கேள்விக் குறியாக இருந்தது.	இலங்கை கடற்படையின் நி.ஒ.விதி 95 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள சிவில் பதவியணியின் சேவை நிரந்தரப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது MOD/ADM/11/01/(I) ஆம் இலக்க மற்றும் 2025 மார்ச் மாதம் 03 ஆம் திகதிய கடிதம் மூலம் எமக்கு அறிவிக்கப்பட்டள்ளது.	சிவில் பதவியணிக்கு முறையான வகையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ)	**2020** ஒக்டோபர் **26** ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இலக்கம் **02/2020** இன் **02(**vii) பிரிவின் பிரகாரம், காலத்திற்குக் காலம் ஏற்படும் சேவைத் தேவைகளுக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையில் திருத்தங்கள் தேவைப்பட்டால், முறையான நியாயப்படுத்தலுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்படுதல் வேண்டுமாயினும், **2024** ஆம் ஆண்டு இறுதிவரை, திருத்தப்பட்ட புதிய பதவியணி எண்ணிக்கைக்கு அனுமதி பெறுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	ஆகக்குறைந்த பதவியணி எண்ணிக்கை அடையாளம் காணப்பட்டு முறையான நியாயப்படுத்தலுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்து அங்கீகரித்தக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.	சுற்றுநிருபங்கள் பிரகாரம் சேவைகளின் தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.